TAMILTH Chennai 1 Regional_02 233350
© 2006-2017 Kasturi & Sons Ltd. - -shanmugam.k@thehindutamil.co.in -



### தமிழகம் முழுவதும் உள்ள

# 3.31 லட்சம் சுவாமி சிலைகள் டிஜிட்டல் தரத்துக்கு மாற்றம்

● உயர் நீதிமன்றத்தில் தமிழக அரசு தகவல்

■ சென்னை

தமிழகம்முழுவதும்31 ஆயிரம்கோயில்களில் உள்ள 3 லட்சத்து 31 ஆயிரம் சுவாமி சிலைகள் படம்பிடிக்கப்பட்டு, டிஜிட்டல் தரத்துக்கு மாற்றப்பட்டு இணையதள சர்வரில் சேகரிக்கப்பட்டுள்ளது என உயர் நீதிமன்றத்தில் தமிழக அரசு தகவல் தெரிவித்துள்ளது.

தமிழக கோயில்களில் உள்ள சுவாமி சிலைகள் அரிதிலும் அரிதானவை என்பதால் அவை பாதுகாப்பாக இருக்க என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்பது குறித்து தமிழக அரசு பதிலளிக்க வேண்டும் என உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

சிலைகடத்தல்தடுப்புப்பிரிவுசிறப்பு அதிகாரியாக நியமிக்கப்பட்டிருந்த பொன் மாணிக்கவேல் மீது குற்றம் சாட்டி சென்னையைச் சேர்ந்த ஒருவர் உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்திருந்தார்.

இந்த வழக்கு விசாரணை நீதிபதிகள் என்.கிருபாகரன், பி.வேல்முருகன் ஆகியோர் அடங்கிய அமர்வில் நேற்று நடந்தது. அப்போது தமிழக அரசு தரப்பில் கூடுதல் தலைமை வழக்கறிஞர் பி.எச்.அர்விந்த் பாண்டியன் ஆஜராகி, அறநிலையத் துறை இணை ஆணையர் சிவக்குமார் சார்பில் அறிக்கை தாக்கல் செய்தார்.

அதில், தமிழகம் முழுவதும் உள்ள சிலைகளைப் பாதுகாக்க 15 பாதுகாப்பு பெட்டகங்கள் அடங்கிய மையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இந்துசமய அறநிலையத் துறையின் கட்டுப்பாட்டில் உள்ள 31 ஆயிரம் கோயில்களில் உள்ள 3 லட்சத்து 31 ஆயிரம் சிலைகள் படம்பிடிக்கப்பட்டு, டிஜிட்டல் தரத்துக்கு மாற்றப்பட்டு இணையதளத்தில் சேகரிக்கப்பட்டுள்ளது.

இன்னும் 3,087 கோயில்களில் தலா ரூ.10 லட்சம் செலவில் சிலைகள் பாதுகாப்பு அறைகள் கட்ட தமிழக அரசு ரூ. 308 கோடி ஒதுக்கீடு செய்துள்ளது என தெரிவிக்கப்பட்டிருந்தது.

இதையடுத்து நீதிபதிகள், தமிழக கோயில்களில் உள்ள சுவாமி சிலைகள் அரிதிலும் அரிதானவை. மிகப் பழமையானவை. இந்த சிலைகள் வெளிநாடுகளுக்கு கடத்தப்பட்டுள்ளதாக நாளிதழ்களிலும் செய்திகள் வெளிவந்துள்ளன. எனவே கோயில் சிலைகளின் பாதுகாப்பு விஷயத்தில் தமிழக அரசு அதிக அக்கறை எடுத்துக் கொள்ள வேண்டும் எனக் கூறி விசாரணையை பிப். 27-ம் தேதிக்கு (இன்று) தள்ளி வைத்துள்ளனர்.

## விமான நிலையத்தில் ரூ.63 லட்சம் தங்கம் பறிமுதல்

■ சென்னை

இலங்கை தலைநகர் கொழும்பில் இருந்து வந்த பயணிகளிடம் ரூ.63 லட்சம் மதிப்புள்ள தங்கம், சென்னை விமான நிலையத்தில் பறிமுதல் செய்யப்பட்டது.

கொழும்பில் இருந்து விமானம் ஒன்று நேற்று சென்னைக்கு வந்தது. அதில் வந்த பயணிகளை சுங்கத் துறை அதிகாரிகள் பரிசோதனை செய்தனர். ராமநாதபுரம் சாகுல் அமீது, கடலூர் அபுபக்கர், சிவகங்கை சுந்தர பாண்டியன் ஆகியோரிடம் அதிகாரிகள் சோதனை செய்ததில், ரூ.48 லட்சம் மதிப்புள்ள 1.1 கிலோ தங்கம் மறைத்து வைத்திருந்தது கண்டுபிடிக்கப்பட்டது. இதையடுத்து, தங்கத்தை பறிமுதல் செய்து சாகுல் அமீதை கைது செய்தனர்.

இதேபோல், கொழும்பில் இருந்து சென்னை வந்த விமானத்தில் திருச்சி ஆரோக்கியமேரி என்பவரிடம் ரூ.15 லட்சம் மதிப்புள்ள 340 கிராம் தங்கம் பறிமுதல் செய்யப்பட்டது.

எல்.ஐ.சி. உடன் இணைந்து இந்தோ ரஷ்யன் சேம்பர் ஆஃப் காமர்ஸ் & இண்டஸ்ட்ரீஸ் மற்றும் 'இந்து தமிழ் திசை' நாளிதழ் நடத்தும்

'அறிவியல் விநாடி வினா-2020'

சென்னையில் நாளை நடைபெறுகிறது

மாணவர்கள் ரஷ்ய விண்வெளி மையத்துக்கு செல்ல வாய்ப்பு

எல்.ஐ.சி. உடன் இணைந்து இந்தோ ரஷ்யன் சேம்பர் ஆஃப் காமர்ஸ் & இண்டஸ்ட்ரீஸ் மற்றும் 'இந்து தமிழ் திசை' நாளிதழ் வழங்கும் 'அறிவியல் விநாடி வினா – 2020' போட்டி சென்னையில் நாளை நடைபெறுகிறது. இந்தப் போட்டியில் சென்னை, காஞ்சிபுரம், செங்கல்பட்டு, திருவள்ளூர், வேலூர், திருப்பத்தூர், ராணிப்பேட்டை, திருவண்ணாமலை, கடலூர், விழுப்புரம், கள்ளக்குறிச்சி ஆகிய மாவட்டங்கள் மற்றும் புதுச்சேரியைச் சேர்ந்த 6 முதல் 8-ம் வகுப்புப் படிக்கும் மாணவ – மாணவியர் பங்கேற்கலாம்.

இப்போட்டி நாளை (பிப். 28, வெள்ளிக்கிழமை) காலை 9 மணிக்கு சென்னை ஆழ்வார்பேட்டை கஸ்தூரிரங்கன் சாலையில் உள்ள ரஷ்ய கலாச்சார மையத்தில் நடைபெறுகிறது.

இப்போட்டியில் பங்கேற்க விரும்பும் அரசு உதவி பெறும் மற்றும் தனியார் பள்ளி மாணவர்கள், போட்டி நடைபெறும் இடத்திலேயே ரூ.300 பதிவுக்கட்டணமாகச் செலுத்தி, பங்கேற்கலாம்.

அரசுப் பள்ளி மாணவர்களுக்கு பதிவுக் கட்டணம் கிடையாது. இந்தபோட்டியில் வெற்றி பெறும் மாணவ–மாணவியர் ரஷ்ய விண்வெளிமையத்துக்கு அழைத்துச் செல்லப்படவிருக்கிறார்கள். மேலும் விவரங்களுக்கு 9003196509 என்ற செல்பேசி எண்ணைத் தொடர்பு கொள்ளவும். இந்நிகழ்ச்சியை UNIBIC, AMW VACAY, REPUTE ஆகியவை இணைந்து வழங்குகின்றன.

# என்எல்சி ஒப்பந்த தொழிலாளர் பேச்சுவார்த்தையில் சுமூக தீர்வு

● நீண்ட நாள் கோரிக்கை நிறைவேறியதால் தொழிலாளர்கள் மகிழ்ச்சி

■ கடலூர்

நெய்வேலி என்எல்சி ஒப்பந்த தொழிலாளர்கள் பேச்சுவார்த்தையில் நேற்றிரவு சுமூக தீர்வு ஏற்பட்டது. இதனால் தொழிலாளர்கள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

நெய்வேலி என்எல்சி இந்தியா நிறுவனத்தில் 13 ஆயிரத்துக்கும் மேற்பட்ட ஒப்பந்த தொழிலாளர்கள் பணிபுரிந்து வருகின்றனர். இவர்கள் பணி நிரந்தரம், ஊதிய உயர்வு, போனஸ் உட்பட பல்வேறு கோரிக்கையை வலியுறுத்தி பல ஆண்டுகளாக போராட்டம் நடத்தி வருகின்றனர்.

ஒப்பந்த தொழிலாளர்கள் தங்கள் கோரிக்கைகள் குறித்து கடந்த 10-ம் தேதி என்எல்சி நிர்வாகத்திடம் வேலை நிறுத்த அறிவிப்பு நோட்டீஸ் கொடுத்திருந்தனர். இதுவரை நிர்வாகத்தில் நடந்த பேச்சுவார்த்தையில் முன்னேற்றம் ஏற்பட்டாலும் இழுபறி நீடித்து வந்தது.

இந்நிலையில் என்எல்சி நெய்வேலி இல்லத்தில் சேர்மன் ராகேஷ்குமார் தலைமையில் நேற்று மீண்டும் பேச்சுவார்த்தை நடந்தது. இதில் நிரந்தர தொழிற்சங்கங்களான தொமுச, சிஐடியூ மற்றும் ஒப்பந்த தொழிற்சங்க நிர்வாகிகள் கலந்து கொண்டனர். பேச்சுவார்த்தை நேற்றிரவு முடிவுக்கு வந்தது. இதில் தற்போது வாங்கும் ஊதியத்தைவிட மாதம் ரூ. 8 ஆயிரம் கூடுதலாகவும். ஆண்டுக்கு 750 பேரை பணி நிரந்தரம் செய்வது உட்பட பல்வேறு கோரிக்கைகள் குறித்து ஒப்பந்தம் கையெழுத்து ஆகி உள்ளது.

பல ஆண்டுகளாக நீடித்து வந்து ஒப்பந்த தொழிலாளர்களின் கோரிக்கை தொடர்பாக நடந்த பேச்சுவார்த்தையில் சுமூகமாக தீர்வு ஏற்பட்டுள்ளது. என்எல்சி சேர்மன் ராகேஷ் குமார் முன்னிலையில் ஏற்பட்டுள்ள இந்த ஒப்பந்தம், ஒப்பந்த தொழிலாளர்கள் இடையே மகிழ்ச்சியை ஏற்படுத்தி உள்ளது.

இதுகுறித்து செய்தியாளர்களிடம் ராகேஷ் குமார் கூறும்போது, "இது வரலாற்று சிறப்புமிக்க ஒப்பந்தம். இந்த ஒப்பந்தம் தொழிலாளர்கள் வாழ்க்கையில் முன்னேற்றத்தை அளிக்கும். நீண்டகாலமாக போராடி வந்த அவர்களுக்கு நல்லதொரு தீர்வை கொடுக்கும் ஒப்பந்தம் கையெழுத்தாகி உள்ளது" என்று தெரிவித்தார்.

மனிதவளத்துறை இயக்குநர் விக்ரமன் கூறும்போது, "10 ஆயிரம் ஒப்பந்த தொழிலாளர்கள் வாழ்வாதாரத்தை காக்கும் ஒரு சிறப்பான ஒப்பந்தம் இது. ஒப்பந்த தொழிலாளர்களின் நீண்டநாள்கோரிக்கையானபணி நிரந்தரம் , ஊதிய உயர்வு, போனஸ் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளுக்கு இந்த ஒப்பந்தம் ஒரு நிரந்தர தீர்வை ஏற்படுத்தி இருப்பதால் தொழிலாளர்களிடையே பெரும் மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. இந்த ஒப்பந்தம் ஆறு ஆண்டு காலத்துக்கு நீடிக்கும்" என்று தெரிவித்தார்.

### தனியார் கல்வி நிறுவன வளாகங்களை

# வணிக நோக்கில் பயன்படுத்தக்கூடாது

● உயர் நீதிமன்றத்தில் உயர்கல்வித் துறை தகவல்

■ சென்னை

தனியார் கல்வி நிறுவன வளாகங்களை வணிக நோக்கில் பயன்படுத்தக் கூடாது என அறிவுறுத்தப்படும் என உயர் கல்வித் துறை சார்பில் உயர் நீதிமன்றத்தில் தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 2016-ம் ஆண்டு நடிகர் சங்க பொதுக்குழு கூட்டம் சென்னை லயோலா கல்லூரி கூட்ட அரங்கில் நடைபெறுவதாக இருந்தது. பின்னர் அங்கு நடைபெறவிருந்த கூட்டம் ரத்து செய்யப்பட்டது.

இந்நிலையில் லயோலா கல்லூரி வளாகத்தை நடிகர் சங்கத்தின் பொதுக்குழுக் கூட்டத்துக்கு வாடகைக்கு விடப்பட்டதை எதிர்த்து பத்திரிகையாளர் சுஜிதா என்பவர் உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்து இருந்தார்.

இந்த வழக்கை உயர் நீதிமன்றம் தாமாக முன்வந்து பொதுநல வழக்காக விசாரிக்க நீதிபதி என். கிருபாகரன் உத்தரவிட்டார்.

அதன்படி சொத்து வரி, மின் கட்டணம் என அரசுக்கு செலுத்த வேண்டிய கட்டணம் மற்றும் வரியில் பல்வேறு சலுகைகளைப் பெறும் மருத்துவம், பொறியியல் மற்றும் தொழில் நுட்ப கல்லூரிகள், பள்ளிகள் உள்ளிட்ட தனியார் கல்வி நிறுவனங்கள், தங்களது வளாகங்களை வணிக நோக்கில் கல்வி சாராத பிற பணிகளுக்கு பயன்படுத்தக் கூடாது என உயர் நீதிமன்றம் ஏற்கெனவே அறிவுறுத்தியிருந்தது.

இந்நிலையில் இந்த வழக்கு நீதிபதிகள் எம்.சத்திய நாராயணன், ஆர்.ஹேமலதா ஆகியோர் அடங்கிய அமர்வில் நேற்று மீண்டும் விசாரணைக்கு வந்தது. அப்போது லயோலா கல்லூரி தரப்பில், தங்களது கல்லூரி வளாகத்தை வணிக நோக்கில் பயன்படுத்தவில்லை என்றும், இது தொடர்பாக விரிவான பதில் மனு தாக்கல் செய்ய அவகாசம் வேண்டும் எனவும் வாதிடப்பட்டது.

உயர்கல்வித் துறை தரப்பில், தமிழகத்தில் அரசு மற்றும் அரசு உதவிபெறும் கல்லூரி நிறுவனங்கள் தங்களது வளாகங்களை வணிக நோக்கில் பயன்படுத்தக் கூடாது என ஏற்கெனவே அறிவுறுத்தப்பட்டு சுற்றறிக்கை பிறப்பிக்கப்பட்டுள்ளது. இதேபோல் தனியார் கல்வி நிறுவனங்களும் தங்களது வளாகங்களை வணிக நோக்கில் பயன்படுத்தக் கூடாது என அறிவுறுத்தப்படும். இது தொடர்பாக சுற்றறிக்கை பிறப்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக தெரிவிக்கப்பட்டது.

இதையடுத்து நீதிபதிகள் இந்த வழக்கில் தமிழக அரசு மற்றும் மின்உற்பத்தி பகிர்மான கழகம், லயோலா கல்லூரி சார்பில் பதிலளிக்க உத்தரவிட்டு விசாரணையை, வரும் ஏப்.9-க்கு தள்ளி வைத்துள்ளனர்.

இந்து தமிழ் திசை

பொறுப்பல்ல: இந்தச் செய்தித்தாளில் பிரசுரம் ஆகியுள்ள விளம்பரங்களின் அடிப்படையில் செயல்படுமுன், அவற்றில் உள்ள தகவல்கள் சரியானவைதானா என்பதை போதுமான அளவு விசாரித்து சரிபார்த்துக்கொள்ளுமாறு வாசகர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். விளம்பரங்கள்/ விளம்பரதாரர் / அவர்களின் தயாரிப்புகள் / சேவைகள் போன்றவற்றின் நம்பகத்தன்மைக்கு இந்தச் செய்தித்தாளின் உரிமையாளரும் பதிப்பாளருமான கஸ்தூரி & சன்ஸ் லிமிடெட் / கே.எஸ்.எல். மீடியா லிமிடெட் உத்தரவாதம் அளிக்கவில்லை. இந்தச் செய்தித்தாளில் வெளியாகும் விளம்பரங்களால் ஏதேனும் சேதம் அல்லது இழப்பு ஏற்படும் பட்சத்தில், இந்தச் செய்தித்தாளின்/ மேற்சொன்ன நிறுவனங்களின் உரிமையாளர், பதிப்பாளர், அச்சிடுவோர், ஆசிரியர், இயக்குநர்கள், ஊழியர்கள் ஆகியோர் எந்தச் சூழலிலும் எந்த வகையிலும் அதற்குப் பொறுப்பாகமாட்டார்கள்.

படைப்புகளை அனுப்புவோர் பிரதி எடுத்துவைத்துக்கொண்டு அனுப்பவும். பிரசுரமாகாதவற்றைத் திரும்ப அனுப்ப இயலாது.

▶▶ பாரத ஸ்டேட் வங்கியின் சென்னை வட்டம் சார்பில், சமூக பொறுப்புணர்வு செயல்பாடுகளின் ஒரு பகுதியாக பெண்களுக்கான மரபு சாரா வேலைவாய்ப்புக்கான சங்கம் என்ற அமைப்புக்கு கம்ப்யூட்டர், மடிக்கணினிகள் வாங்க ரூ.2.23 லட்சமும், சுவாமி விவேகானந்தர் ஊரக வளர்ச்சி சமூகம் என்ற அமைப்புக்கு 10 கழிப்பறைகள் கட்டுவதற்காக ரூ.5 லட்சமும் வழங்கப்பட்டது. இதற்கான காசோலைகளை வங்கியின் பொது மேலாளர்கள் சங்கர், வர்லி தாமஸ் ஆகியோர் பயனாளிகளிடம் வழங்கினர்.

## 308 கிலோ கஞ்சா பறிமுதல் 2 பேர் கைது

■ சென்னை

ஆந்திர மாநிலம் விசாகப்பட்டினத்தில் இருந்து சென்னைக்கு லாரி ஒன்றில் கஞ்சா கடத்தி வரப்படுவதாக மத்திய போதைப் பொருள் தடுப்புப் பிரிவு சென்னை மண்டல இயக்குநர் புரூனோவுக்கு ரகசியத் தகவல் கிடைத்தது. இந்தத் தகவலின் அடிப்படையில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள், நேற்று முன்தினம் இரவு சென்னை அருகே காரனோடை சுங்கச்சாவடியில் திடீர் வாகன சோதனையில் ஈடுபட்டிருந்தனர்.

அப்போது அங்கு அவர்கள், காகிதங்களை ஏற்றி வந்த லாரியை வழி மறித்து சோதனையிட்டனர். சோதனையில், அந்த லாரியில் 810 பெட்டிகளில் 308 கிலோ கஞ்சா கடத்திக் கொண்டு வரப்பட்டது தெரியவந்தது. இதையடுத்து அதை அதிகாரிகள் பறிமுதல் செய்து, லாரியில் இருந்த மதுரையைச் சேர்ந்த ஆண்டி (30), மருதுபாண்டி (42) ஆகிய 2 பேரைக் கைது செய்தனர்.

மேலும், இது தொடர்பாக வழக்குப் பதிவு செய்து, கஞ்சா கடத்தலுக்கு பின்னணியில் இருந்து மூளையாக செயல்பட்டவர்கள் யார், மாணவர்கள் அல்லது ஐ.டி. பணியாளர்களை குறி வைத்து, அவர்களுக்கு விநியோகிப்பதற்காக கஞ்சா கடத்தி வரப்பட்டதா என்பன உள்ளிட்ட பல்வேறு கோணங்களில் மத்திய போதைப் பொருள் தடுப்புப் பிரிவு அதிகாரிகள் தொடர்ந்து விசாரித்து வருகின்றனர்.

### அமைதி பூங்காவான இந்தியாவை

# வேறு திசையில் கொண்டு செல்ல முயற்சி

● காங்கிரஸ் செய்தித் தொடர்பாளர் குஷ்பு குற்றச்சாட்டு

■ சென்னை

அமைதிப் பூங்காவான இந்தியாவை வேறு திசையில் கொண்டு செல்ல முயற்சிக்கின்றனர் என்று காங்கிரஸ் கட்சியின் தேசிய செய்தித் தொடர்பாளர் நடிகை குஷ்பு தெரிவித்தார்.

இதுதொடர்பாக சென்னை விமான நிலையத்தில் செய்தியாளர்களிடம் அவர் நேற்று கூறியதாவது:

குடியுரிமைச் சட்டம் குறித்து மக்களுக்கு சரியான புரிதல் இல்லை என்று பாஜக கூறுகிறது. ஆனால், மக்களுக்கு புரியும்படி சொல்ல பேச்சுவார்த்தைக்கு வருவதில்லை. டெல்லியில் பெரும் கலவரம் நடந்துக் கொண்டு இருக்கும் போது, அமெரிக்க அதிபர் டிரம்ப் வந்ததால் கவனிக்க முடியவில்லை என்கின்றனர். நாடுமுழுவதும் போராட்டம் நடந்து கொண்டிருக்கிறது. ஆனால், மத்திய அரசு பிடிவாதமாக இருக்கிறது. என்ஆர்சி பற்றி பேசவே இல்லை என்று பிரதமர் மோடி தெரிவிக்கிறார். ஆனால், என்ஆர்சி கொண்டு வரப்படும் என்று அமித்ஷா கூறுகிறார். பிரதமருக்கும், உள்துறை அமைச்சருக்கும் இடையே கருத்து வேறுபாடுகள் உள்ளன. இதில் யார் பொய் பேசுகின்றனர் என்று தெரியவில்லை.

ஜனநாயக நாட்டில் மக்கள் எழுப்பும் கேள்விகளுக்கு பதிலளிக்க வேண்டும். பல்கலைக்கழகத்தில் தாக்குதல் நடத்தியவர்கள், வன்முறையைத் தூண்டும் விதமாக பேசிய பாஜகவினரை ஏன் கைது செய்யவில்லை. டெல்லி போலீஸ் என்ன செய்து கொண்டு இருக்கிறது என்றே தெரியவில்லை. டெல்லி கலவரத்தில் உள்துறை அமைச்சர் அமித்ஷா கவனம் செலுத்தி இருக்க வேண்டும்.

நாடு எந்த திசையில் போகிறது, எங்கே போய் முடியப் போகிறது என்ற பயம் ஏற்பட்டுள்ளது. அமைதிப் பூங்காவான இந்தியாவை வேறு திசையில் கொண்டு செல்ல நினைக்கிறார்கள். குடியுரிமைச் சட்டத்தை பற்றி கேள்வி கேட்டு மக்கள் போராடுகின்றனர். அதற்கு பதில் சொல்ல தெரியாததால், இதை திசை திருப்ப பாஜக முயற்சி செய்கிறது.

இவ்வாறு குஷ்பு தெரிவித்தார்.

FORM A
Public Announcement
(Under Regulation 6 of the Insolvency and Bankruptcy Board of India (Insolvency Resolution Process for Corporate Persons) Regulations, 2016)
FOR THE ATTENTION OF THE CREDITORS OF KAMACHI INDUSTRIES LIMITED

| Relevant Particulars | | |
|---|---|---|
| 1 | Name of Corporate Debtor | KAMACHI INDUSTRIES LIMITED (Formerly Kamachi Sponge & Power Corporate Ltd.) |
| 2 | Date of incorporation of Corporate Debtor | 08/10/2003 |
| 3 | Authority under which Corporate Debtor is incorporated / registered | Registrar of Companies - Chennai |
| 4 | Corporate Identity No. / Limited Liability Identification No. of corporate debtor | U27106TN2003PLC051727 |
| 5 | Address of the registered office and principal office (if any) of corporate debtor | ABC Trade Centre, Old No.50, (New No. 39), 3rdFloor, Anna Salai,Chennai, Tamil Nadu-600002. |
| 6 | Insolvency commencement date in respect of corporate debtor | NCLT order dated 19/02/2020 (Published on NCLT Website on 25/02/2020) |
| 7 | Estimated date of closure of insolvency resolution process | 17/08/2020 |
| 8 | Name and registration number of the insolvency professional acting as interim resolution professional | Mr. Vikas Prakash Gupta IP No. IBBI/IPA-001/IP-P00501/2017-18/10889 |
| 9 | Address and e-mail of the interim resolution professional, as registered with the Board | Address:C/o. Dipti Enterprises,55, Nehru Putla, Itwari, Nagpur, Maharashtra-440002. Email : vikas.gupta@bngca.com |
| 10 | Address and e-mail to be used for correspondence with the interim resolution professional | Address : New No.37/4,Vasantham II, Main Road, Alwarthiru Nagar Annexe, Chennai, Tamil Nadu-600087. Email : ip.kamachi@gmail.com |
| 11 | Last date for submission of claims | 10/03/2020 |
| 12 | Classes of creditors, if any, under clause (b) of sub-section (6A) of section 21, ascertained by the interim resolution professional | Not Applicable |
| 13 | Names of Insolvency Professionals identified to act as Authorised Representative of creditors in a class (Three names for each class) | Not Applicable |
| 14 | (a) Relevant Forms and (b) Details of authorized representatives are available at : | (a) Relevant Forms available at https : //ibbi.gov.in/home/downloads (b) Not Applicable |

Notice is hereby given that the National Company Law Tribunal, Chennai Bench has ordered the commencement of a corporate insolvency resolution process of Kamachi Industries Limited vide NCLT order dated 19/02/2020 published on 25/02/2020.
The creditors of Kamachi Industries Limited are hereby called upon to submit their claims with proof on or before 10/03/2020 to the interim resolution professional at the address mentioned against entry No. 10.
The financial creditors shall submit their claims with proof by electronic means only. All other creditors may submit the claims with proof in person, by post or by electronic means.
Submission of false or misleading proofs of claim shall attract penalties.

Sd/-
Vikas Prakash Gupta
Interim Resolution Professional
IBBI/IPA-001/IP-P00501/2017-18/10889

Date : February 27, 2020
Place : Mumbai

அரசியல் கட்சிகள், சங்கங்கள் தங்களது செய்திகளை press.release@hindutamil.co.in என்ற மின்னஞ்சலில் அனுப்பலாம்.

வரி விளம்பரங்கள்

தொழில்

டீலர்கள் தேவை

SONA BELT 3X3 தினம் ரூ.7,500; XXX BELT 3X3 தினம் ரூ.7,500 டெலிவரி ஏஜெண்ட். Ct: 8940589268

பொது

சுற்றுலா

தினசரி திருப்பதி/ஷிரடி தர்சன் Kerala, Goa, Singapore Packages. Sri Balaji 9884053380

6 நாள் ஷீரடி-மார்ச் 8, 22, 29 பண்டரிபுரம், மந்திராலயம் ஏப். 5,12, 19, 26, மே 3, 10, 17, 24, 31
8 நாள் காசி, கயா-மார்ச் 16,30 அலகாபாத் - ஏப்.6,13,20,27, மே 4,11,18,25
11 நாள் காசி, கயா-மார்ச் 20 டெல்லி, ஆக்ரா, அவுரா - ஏப். 17, மே 1, 11, 22
16 நாள் காசி,அயோத்தி-ஏப். 24
16 நாள் நேபாள், முக்திநாத், காசி ஏப். 19, மே 3,10,17,24, ஜூன் 14
14 நாள் நவஜோதிலிங்கம்-ஏப்.12
15 நாள் பஞ்சதுவாரகா-மார்ச் 10
7 நாள் கேரளா படகு வீடு - மே 18
11 நாள் கேங்டாக், டார்ஜிலிங் ஏப். 8, 15, 22, 29, மே 6, 13, 20, 27
14 நாள் சிம்லா, குளுமணாலி
14 நாள் காஷ்மீர்-மே 5, 14, 23
16 நாள் பத்ரிநாத், கேதார்நாத் கங்கோத்ரி, யமுனோத்ரி மே 3, 12, 18, 27, ஜூன் 2, 11
9 நாள் இலங்கை 4 நாள் கோவா
SRINIVASA TOUR 9710025326

IRCTC பாரத் தர்ஷன்
ராமாயண யாத்திரை
நாசிக் - ஹம்பி - சித்தூகூடம் - பக்சார் - வாரணாசி - ரகுநாதபுரம் - சீதாமார்ஹி - ஜனக்புரி (நேபாளம்) - அயோத்தி - நந்திகிராமம் - அலகாபாத் - சிருங்காவேர்புர்
05.03.20 (14 நாட்கள்) Rs.15,990/-
இரயில் பயணம், போக்குவரத்து, உணவு, ஹாலில் தங்கும் வசதி, GST உட்பட
90031 40680
90031 40655 / 714

வருந்துகிறோம்!

இரங்கல்

இறப்பு

கண்ணீர் அஞ்சலி

68 years
திருசெங்காட்டங்குடி
திருமதி கோதை சத்தியமூர்த்தி
26.02.2020 அன்று ஆச்சார்யன் திருவடி அடைந்தார்
நீங்கா அன்புடன்
குடும்பத்தார்: சத்தியமூர்த்தி ஸ்ரீராம் & அஸ்வினி, சுபா & ரகுநாதன்
கை பேசி: 89395 98375

### உயர் நீதிமன்றத்தில் வேலைவாங்கித் தருவதாக கூறி

# ரூ. 37 லட்சம் மோசடி செய்த வழக்கறிஞர் கைது

■ நாமக்கல்

சென்னை உயர் நீதிமன்றத்தில் வேலை வாங்கித் தருவதாகக் கூறி ரூ.37 லட்சம் மோசடி செய்த முசிறியைச் சேர்ந்த வழக்கறிஞரை நாமக்கல் மாவட்ட குற்றப்பிரிவு காவல் துறையினர் கைது செய்தனர்.

திருச்சி மாவட்டம் முசிறியைச் சேர்ந்தவர் பி.சதீஸ்குமார் (35). இவர் சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்கறிஞராக உள்ளார். இவர் நாமக்கல் மாவட்டம், முட்டாஞ்செட்டியைச் சேர்ந்த கலைசெல்வன், கனிமொழி தம்பதி மகன் அடல்பிஹாரி அலெக்சாண்டருக்கு, சென்னை உயர் நீதிமன்றத்தில் எழுத்தாளார் வேலை வாங்கித் தருவதாக கூறியுள்ளார். இதற்காக ரூ.4.50 லட்சம் வழங்க வேண்டும், எனவும் தெரிவித்துள்ளார்.

> சதீஸ்குமார் வங்கி கணக்கில் ரூ. 3.50 லட்சத்தை கலைச்செல்வன் செலுத்தியுள்ளார். மேலும், நேரில் ரூ.1 லட்சம் ரொக்கமாகவும் வழங்கி உள்ளார்.

இதை உண்மையென நம்பி சதீஸ்குமார் வங்கி கணக்கில் ரூ. 3.50 லட்சத்தை கலைச்செல்வன் செலுத்தியுள்ளார். மேலும், நேரில் ரூ.1 லட்சம் ரொக்கமாகவும் வழங்கி உள்ளார். எனினும், வழக்கறிஞர் சதீஸ்குமார் கூறியபடி வேலை எதுவும் வாங்கித் தரவில்லை. இது குறித்து நாமக்கல் மாவட்ட காவல் கண்காணிப்பாளரிடம் கனிமொழி புகார் அளித்தார்.

### 11 பேரிடம் மோசடி

புகாரின்பேரில் நாமக்கல் மாவட்ட குற்றப்பிரிவு போலீஸார் வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தினர். விசாரணையில் இதுபோல் 11 பேரிடம் வழக்கறிஞர் சதீஸ்குமார் மோசடி செய்தது தெரியவந்தது. இதற்காக ரூ.37 லட்சத்து 8 ஆயிரம் வாங்கியதும் தெரியவந்தது. இதையடுத்து முசிறியில் பதுங்கி இருந்த சதீஸ்குமாரை, மாவட்ட குற்றப்பிரிவு போலீஸார் கைது செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

தமிழ்நாடு அரசு / பொதுப்பணித்துறை
பொதுப்பணித்துறை / கட்டட அமைப்பு இன விலை ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு / ஒப்பந்த முறை : சி படிவம் – இன விலை முறை
குறுகிய கால ஒப்பந்தப்புள்ளி அறிவிக்கை எண். 17 / 2019–20 / கட்டட (க & ப) வட்டம் / திருச்சி / நாள் : 24.2.2020
தமிழ்நாடு ஆளுநருக்காகவும் மற்றும் அவரது சார்பாக கண்காணிப்புபொறியாளர், பொ.ப.து, கட்டட கட்டுமானம் மற்றும் பராமரிப்பு வட்டம், திருச்சி அவர்களால் மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் தகுதி மற்றும் அனுபவம் வாய்ந்த ஒப்பந்தக்காரர்களிடமிருந்து கீழ்காணும் பணிகளுக்கு குறிப்பிட்ட தேதியில் பிற்பகல் 3.00 மணி வரை வரவேற்கப்படுகிறது. பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் அன்றைய தினமே பிற்பகல் 3.30 மணிக்கு வந்திருக்கும் ஒப்பந்தக்காரர்கள் அல்லது அவர்களுடைய முகவர்கள் முன்னிலையில் திறக்கப்படும்.
வேலையின் பெயர் : தஞ்சாவூர் மாவட்டம், தஞ்சாவூரில் உள்ள ஒருங்கிணைந்த நீதிமன்ற கட்டடத்திற்கு உள் மற்றும் வெளிப்புறம் மின் வசதிகள் ஏற்படுத்தும் பணி. பணியின் நோராய மதிப்பு (ரூபாய்) இலட்சங்களில் சரக்கு மற்றும் சேவை வரி 12% உட்பட.) : 74.90 முன் வைப்புத் தொகை (ரூபாய்) : 47,500/– ஒப்பந்தப்புள்ளி பெறும் கடைசி நாள் : 06.03.2020 ஒப்பந்தப்புள்ளி படிவங்கள் கிடைக்க பெறும் காலம் : 27.02.2020 முதல் 05.03.2020 பிற்பகல் 5.45 மணி வரை. ஒப்பந்தக் காலம் : 5 மாதங்கள்.
குறிப்பு: (1) தகுதி விவரம் உள்ளிட்ட பிற அனைத்து விவரங்களும் ஒப்பந்தப்புள்ளி ஆவணங்களில் உள்ளது. ஒப்பந்தப்புள்ளி ஆவணங்களை கீழ்க்கண்ட இணையதளத்தில் இலவசமாக தருவித்துக்கொள்ளலாம் www.tenders.tn.gov.in. & www.tn.tenders.gov.in 2) மேலும் கண்காணிப்புப் பொறியாளர், பொ.ப.து, கட்டட கட்டுமானம் மற்றும் பராமரிப்பு வட்டம் திருச்சி அலுவலகத்தில் ஒப்பந்தப்புள்ளி ஆவணங்களுக்கு Rs.15,000/- + GST Rs.1800/- தொகையை செலுத்தியும் நேரில் பெற்றுக்கொள்ளலாம். (3) முன் வைப்புத்தொகை வரவு வைக்கப்பட வேண்டிய அலுவலர்: மின்பொறியாளர், பொ.ப.து., மின் கோட்டம், திருச்சி-20. (4) ஒப்பந்தக்காரர்கள் குறைந்தபட்ச தகுதி : பொதுப்பணித்துறையில் வகுப்பு II-ல் ரூ.75.00 இலட்சம் மற்றும் அதற்கு மேல் மதிப்பில் பதிவு பெற்ற ஒப்பந்தக்காரர்கள். (5) ஒப்பந்தக்காரர் தகுதி குறித்த விபரம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி விவர குறிப்புகள் மேற்குறிப்பிட்டுள்ள இணையதளத்தில் தெரிந்து கொள்ளலாம். (6) ஒப்பந்தப்புள்ளி அட்டவணை பெறவும் அல்லது உறையி